**செய்தி வெளியீடு எண்: 72/2022** **நாள்: 07.08.2022**

**பத்திரிக்கை செய்தி**

**அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (07.08.2022) ரோட்டரி மெட்ரோ ஹண்ட் நடத்தப்பட்டது**

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ரோட்டரி மாவட்டம் 3232-உடன் இணைந்து ரோட்டரி மெட்ரோ புதையல் வேட்டை (ஹண்ட்) நடத்தி வருகிறது. இந்த ரோட்டரி மெட்ரோ ஹண்ட், பயணம் மற்றும் போக்குவரத்தை எளிதாக்குவது, மாசுபாட்டைக் குறைத்தல், எரிபொருளைச் சேமிப்பது மற்றும் எளிதான அணுகுமுறையை அதிகரிப்பது போன்ற கருத்துக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ரோட்டரி மெட்ரோ ஹண்ட் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுவது மட்டுமல்லாமல், அனைவரின் மனதையும் ஊக்குவிக்கும் வகையில் ஒரு குழுவாக பணியாற்றுவதன் மூலம் வேடிக்கையான அனுபவமாகவும் உள்ளது. இந்த ரோட்டரி மெட்ரோ ஹண்டில் மொத்தம் 600 ரோட்டரி உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் திரு. எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (07.08.2022) கொடியசைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட ஆளுநர் டாக்டர் நந்தகுமார், மாவட்ட முதல் பெண்மணி டாக்டர் சுமேதா, மார்க் மெட்ரோவின் மேலாண்மை இயக்குநர் ஆனந்த், கூடுதல் பொது மேலாளர் திரு. எஸ்.சதீஷ் பிரபு, (தொடர்வண்டி மற்றும் இயக்கம்) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**